அதிலே பயிர் செய்வதற்கு பம்ப் செட்டு அமைத்துக் கொடுத்து, அவர்களுக்குப் புதிய ஜீவாதாரண அடிப்படையிலே விவசாயம் செய்யவும் மாற்றுத் திட்டங்களை அரசு ஏதேனும் திட்டத்தின் மூலம் கொண்டு வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கருத்து குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆகியோருடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பட்ட அவர்களது துறை சம்பந்தப்பட்ட வினாக்கள், இப்போது எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

வினா எண் **244**, திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

244—

மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து வழித்தடத்தை மாற்றி இயக்குதல்.

*** 21606**—திரு. எஸ். ஆசைமணி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடியில் இருந்து சென்னை செல்லும் தடம் எண் 331, திருவள்ளுவர் அரசு விரைவுப் பேருந்தை மன்னார்குடி, கூத்தாநல்லூர், கொரடாச்சேரி, குடவாசல், நாச்சியார்கோயில், கும்பகோணம் வழியாக இயக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தடம் எண் 331 என்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து எதுவும் மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு இயக்கப்படவில்லை. அக்கழகத்தின் தடம் 339 எண் கொண்ட பேருந்து மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு கூத்தாநல்லூர், கொரடாச்சேரி, குடவாசல், நாச்சியார்கோயில், கும்பகோணம் வழியாக இயக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கின்ற மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த பேருந்து முன்பே இந்த வழியில் இயக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதற்காக என் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பேருந்து அங்கே மன்னார்குடியில் புறப்படுகின்ற நேரத்தில், இங்கேயும் அதே நேரத்தில் சென்னையிலேயிருந்து மன்னார்குடியை நோக்கி இதே வழியாகச் செல்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் 15 நாட்களுக்குள்ளே சென்னையிலிருந்து மன்னார்குடிக்கு பேருந்துகள் இயக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 245, டாக்டர் எம்.பி.சேகர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

245—

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர் பணியிடங்களைப் பூர்த்தி செய்தல்.

* 21772—டாக்டர் எம். பி. சேகர்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் 1992-93-ல் ஓட்டுநர்கள் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுவிட்டன.

டாக்டர் எம். பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெயிலில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்வதைக் காட்டிலும் மிகச் சிறந்ததாகக் கருதப்படும், முதல்வர்களுக்கு எல்லாம் முத்தான முதல்வர்